எம்.சி.ஓபி.எண் : 888/2019 தேதி: 24/11/2025

மசா : 1

பெயர் : தேவேஸ் பாரிக்

த/பெயர் : விநோத்குமார் பாரிக்

வயது : 23

**<u>மனுதாரரின் தரப்பில் சாட்சி 1ன் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர். எனது தரப்பில் ஏற்கனவே பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு சான்று ஆவணங்கள் மசா ஆ1 முதல் மசா ஆ13 வரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மேற்படி விபத்தானது தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது என்றால் சரிதான். நான் டெம்போ டிரவல்ஸ் வெனில் பயணம் செய்த நபர் என்றால் சரிதான். மேற்படி டெம்போ டிரவல்ஸ் வெனில் என்னுடன் சேர்ந்து 12 நபர்கள் பயணம் செய்தோம். டிரைவரை சேர்க்காமல் 12 நபர்கள் கணக்கிடப்பட்டது. மேற்படி விபத்தில் அரசு பேருந்தும் ஈடுபட்டிருந்தது என்றால் சரிதான். அரசு பேருந்தை இந்த வழக்கில் எதிர்மனுதாரராக சேர்க்கவில்லை. மேற்படி விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு நான் உள்நோயாளியாக 2 மாதங்கள் இருந்தேன். 2 மாதங்கள் உள்நோயாளியாக இருந்தேன் என்பதற்கான ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள மசா ஆ3 ன் படி நான் உள்நோயாளியாக 4 நாள்கள் தான் இருந்ததாக குறிபிட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தொடர் சிகிச்சை ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் தொடர் சிகிச்சைக்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் தாக்கல் செய்துள்ளேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தொழில் மற்றும்

வருமான இழப்பு காட்டக்ககூடிய ஆவணம் ஏதும் நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டெம்போ வென் சரியாக தான் சென்றுக் கொண்டிருந்தது என்றாலும் அரசு பேருந்தின் மீது தான் தவறு இருந்தது என்றாலும் நான் அதிகபடியான நஷ்ட ஈடு பெறுவதற்காக டெம்போ டிரவல்ஸ் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.